


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.09.2024) சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கில் முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி. ஆர். தமிழரசி, எஸ். மாங்குடி, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆஷா அஜித், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்ட எல்லையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## 75 கி.மீ. தூரத்திற்கு சாலை இருபுறமும் கழகக் கொடிகள் - அலங்கார வளைவுகள் - விழாக்கோலம்!

சிவகங்கை. செப். 11 -

தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நேற்று 10ம் தேதி சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

இதற்காக மதுரையிலிருந்து கார் மூலம் வருகை தந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சிவகங்கை மாவட்ட எல்கையான பூவந்தியில் மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் ஆயிரக்கணக்கான தி.மு.க.வினர் வரவேற்றார்கள். கழக நிர்வாகிகள் பூங்கொத்து மற்றும் சால்வை கொடுத்து வரவேற்றார்கள். அமைச்சர் ஒவ்வொருவரிடமும் சால்வையினை பெற்றுக் கொண்டார்.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிவகங்கை கோட்டாட்சியர் பி.விஜயகுமார், திருபுவனம் தாசில்தார், எஸ்.என்.விஜயகுமார் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். அதைத் தொடர்ந்து மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி.ஜோன்ஸ் ரூசோ, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, எம்.சோமசுந்தரம், ஏ.ஆர்.ஜெயமூர்த்தி, உதயகுமார்,

நகர்கழக செயலாளர்கள் சி.எம்.துரை.ஆனந்த், பெரி.பாலா, என்.குணசேகரன், க.பொன்னுச்சாமி ஒன்றியக் கழகச் செயலாளர்கள் திருமதி.வசந்தி சேங்கைமாறன் எம்.ஏ. கடம்பசாமி, துரை.ராஜாமணி, எம்.அண்ணாதுரை, எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், கே.பாலசுப்பிரமணியன், பூமணி, நாகனி ரவி, பூபால சிங்கம், கே.ஆர்.ஆனந்த், சுப.சின்னத்துரை,

நா.நெடுஞ்செழியன், யோக.கிருஸ்ணகுமார், வே.ஆரோக்கியசாமி, வே.தமிழ்மாறன், ஆறு. செல்வராசன், பேரூர் கழகச் செயலாளர்கள் நாகூர் கனி, கதிர்வேல், ஆர்.கார்த்திகேயன், ஜெயராமன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், வழக்கறிஞர் துஷாந்த்பிரதீப் குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், நிர்வாகிகள் அண்ணாமலை சேகர், வீனஸ் ராமநாதன், அ.அயூப்கான், ஜெயகாந்தன், அன்பு செழியன், அழகையா , சிவபுரிசேகர், சு.மனோகரன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார். அயலக அணி சன்சீமான்சுப்பையா, தகவல் தொழில்நுட்ப அணி காளிமுத்து, பிள்ளையார் பட்டி ராஜேஸ், சுப.தமிழரசன், வர்த்தக அணி ருக்மா சரவணன், ராமமூர்த்தி, மாரி, சோமசுந்தரம்,

மகளிரணி நிர்வாகிகள் மார்க்ரெட் கமலா, திலகவதி கண்ணன், மஞ்சுளா, பத்மாவதி, ஒன்றியக்குழு தலைவர்கள் மஞ்சுளா பாலசந்தர் லதா அண்ணாதுரை, துணைத் தலைவர் முத்துச்சாமி, சோமசுந்தரம் மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சி செயலாளர்கள் வரவேற்றார்கள். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வருகையை முன்னிட்டு மாவட்ட எல்கையான பூவந்தி முதல் சிவகங்கை நகர், சோழபுரம், காஞ்சிரங்கால், ஒக்கூர், மதகுபட்டி, கல்லல், திருப்பத்தூர், பிள்ளையார்பட்டி, காரைக்குடி நகர் வரை சுமார் 75கீ.மீ. தூரம் வரை சாலையின் இருபுறம் இருவண்ணக் கழகக் கொடிகள் மற்றும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தது.

நிகழ்ச்சிக்குப் பின் சிவகங்கை மாவட்ட விளையாட்டு மன்றத்தில் விளையாட்டுத்துறை சார்பில் மாவட்ட அளவிலான முதல்வர் சுழற் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியினை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்றார்.




கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில் அருகே தேரேகால்புதூர், கெங்கா கிரான்ட்யுர் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் ஜெ.ஹெலன் டேவிட்சன், என்.தில்லைசெல்வம், என்.சுரேஷ்ராஜன், வி.ஜோசப் ராஜ், எ.பாபு வினிபிரட், என்.தாமரை பாரதி, எம்.சிவராஜ், வழக்கறிஞர் ப.ஆனந்த், எம்.மதியழகன், பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குருகண்ணன், ஆ.லிவிங்ஸ்டன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், என்.நாகூர் கான், இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, எம்.சேக்மீரான் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில்

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார்!

கன்னியாகுமரி, செப் 11-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில் அருகே தேரேகால்புதூர், கெங்கா கிரான்ட்யுர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தின் போது யோகாசனத்தில் தொடர்ந்து சாதனை படைத்து வரும் 6ம் வகுப்பு மாணவி சோபிகாவின் சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது. மாணவியின் சாதனையை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் சார்பில் சிறுமிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி ரூ. 25,000 ஊக்கத் தொகையை வழங்கி கௌரவித்தார். மேலும் வெளிநாட்டில் இருந்து முதலமைச்சர் அவர்கள் சென்னை திரும்பியதும் அவருடன் கலந்து பேசி, விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மூலம் மாணவிக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படும் என கழக அமைப்புச் செயலாளர் தெரிவித்தார்.

கூட்டத்தில் மாநில மகளிர் அணிச் செயலாளர் ஜெ. ஹெலன் டேவிட்சன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் என்.தில்லை செல்வம், தணிக்கைக்குழு உறுப்பினர் என்.சுரேஷ்ராஜன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் வி.ஜோசப் ராஜ், அயலக அணி துணைச் செயலாளர் எ.பாபு வினிபிரட், வர்த்தகர் அணி இணைச் செயலாளர் என்.தாமரைபாரதி, அமைப்புச் சாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளர் எம்.சிவராஜ், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குரு கண்ணன், ஆ.லிவிங்ஸ்டன், ஏ. சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், நகர செயலாளர் என்.நாகூர்கான், பகுதி செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, எம்.சேக்மீரான் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 7 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

